2019 ஜூலை 20] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உழைத்ததற்கான பலன்கள் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு நாங்கள் பயிர் செய்த. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சுருக்கமாகச் சொல்லுங்கள். மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசுவது போன்று நீங்கள் பேசினால் மற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காது. இனிமேல், நான் மணியை அடிக்கமாட்டேன். எப்படிப் பேசுகிறீர்களோ, பேசுங்கள். இந்த அலுவலை முடிக்க இன்னும் சிறிது நேரம்தான் இருக்கிறது. ஒவ்வொரு அலுவலுக்கும் குறிப்பிட்ட நேரம் இருக்கிறது. அதற்குப் பிறகு நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அழைக்க வேண்டும். நீங்கள் உங்கள் சௌகரியம்போல் சொல்லலாம். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அவருக்கு அங்குள்ள நிலைமைகளெல்லாம் தெரியும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் அவர்களிடம் புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்த அவையில் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயிதான். அவர்களுக்கான உற்பத்திச் செலவுத் தொகையைக் கொடுத்தால்கூட போதும். அத்தகைய நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, இந்த அரசாங்கம் விவசாயிகள் உற்பத்தி செய்த கரும்புக்கான தொகையை வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார்.*

(அஇ) திருநெல்வேலி தொகுதி, கண்டியபேரி அரசு மருத்துவமனை பணியினை முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று நேரமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

முற்பகல் 11—00

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கண்டியபேரி அரசு மருத்துவமனைக்கு கடந்த ஆண்டு ரூ.30*

கோடி நிதி ஒதுக்கப்பட்டும் இன்னும் பணி துவங்கப்படவில்லை. இந்த ஆண்டு அந்தப் பணியை முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருமாறு அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(அஈ) கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலை, அகற்றப்பட்ட அம்பேத்கர் சிலையை சொந்த இடத்தில் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 40 ஆண்டு காலமாக கிருஷ்ணகிரி–பாண்டிச்சேரி தேசிய நெடுஞ்சாலையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலை இருந்தது. அது 16–9–2016 அன்று அரசின் மூலமாக அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட சிலை பேரூராட்சியில் இருக்கிறது. நாங்கள் சொந்த இடம் வாங்கி விட்டோம். சொந்த இடத்திலே அந்தச் சிலையை அமைப்பதற்கு அரசு அனுமதிக்குமா என்பதைக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) துறைமுகம் தொகுதி, தங்கசாலை தெருவிலுள்ள முருகன் கோயிலைப் புனரமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கசாலை தெருவில் முருகன் திருக்கோயில் அமைந்திருக்கின்றது. 'வேல் உண்டு வினை இல்லை, மயில் உண்டு குறையில்லை, கோல் உண்டு குறைவில்லை' என்று சொல்வார்கள். இந்த வார்த்தைகளுக்குச் சொந்தமான அந்தக் கோயிலில் மலைபோல அமைந்திருக்கின்ற கோபுரம் இருக்கும். படிகலிங்கம் அந்தக் கோயிலில் மட்டும்தான் இருக்கின்றது. பின்னால் ஆரத்தி காட்டினால் முன்னால் ஜொலிக்கும். அந்தக் கோயில் இன்றைக்கு முழுவதுமாக பக்தர்களுக்குப் பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. 'வறண்டுபோன நிலங்கள் எல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும்; அந்த நதியே காய்ந்துபோனால் துன்பப்படுவோர் தெய்வத்திடம் முறையிடுவார்கள்; அந்தத் தெய்வமே கலங்கி நின்றால், அந்தத் தெய்வத்துக்கு யாரால் ஆறுதல்*